28th March 1964]

(இ) இந்த வேலைகள் நிதி ஆண்டின் இறுதிக்குள் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மானூர் பஞ்சாயத்து யூனியனிலிருந்து அந்த வேலையைச் செய்து முடிப்பதாகச் சம்மதித்து ஏதாவது எழுதியிருக்கிறார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: அந்தத் தகவல் என்னிடம் இப்பொழுது இல்லை.

அறந்தாங்கி பஞ்சாயத்துக் கூட்டுமன்றத்திற்குப் புதிய கட்டிடம்.

* 423 **கேள்வி.—திரு. ஆ. துரையரசன்:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

அறந்தாங்கி பஞ்சாயத்துக் கூட்டுமன்றத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஆம்.

Consumers' Co-operative Societies.

* 424 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to state:

(a) the progress made so far in implementing the scheme of developing the Consumers' Co-operative for the supply of consumer goods at fair prices; and

(b) the number of fair price shops now functioning in each important city, under this scheme?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: சபையில் [a] அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

பயறு மூட்டைகளில் நஞ்சு கலக்கப்படுதல்.

* 425 **கேள்வி.—திரு. செ. மாதவன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு எப்ரல் மாதம் வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட பயறு மூட்டைகள் மதுரை மாவட்டம் திண்டுக்கல் நகரத்திலும் இராமநாதபுரம் மாவட்டம் இராசாபாளையத்திலும் விற்பனை செய்யப்பட்டபோது அதில் நஞ்சு கலக்கப்பட்டிருந்தது என்பது உண்மையா?

(இ) இதுபற்றி மதுரை மாவட்ட கலெக்டர் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ), (இ) பி.எச்.சி. பவுடர் (B.H.C. Powder) கலந்திருப்பதாகச் சந்தேகிக்கப்பட்ட சில பயறு மூட்டைகள் திண்டுக்கல்லில் வந்து இறங்கின. அத்தகைய பயறு மூட்டைகள் ராஜபாளையத்தில் வந்திறங்கிய

---

[a] 577–578 ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.